இணைஇயக்குநர் (பணியமைப்பு), தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அலுவலகம் , கிண்டி, சென்னை–32 அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு. செ.ஹென்றி ஆனந்தராஜ்

செ.மு.எண்: 1496/இபி2/2015

நாள்: 16.05.2019

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – நேரடி நியமனம் – 2015–16– தொகுதி IV பணி – இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் – தற்காலிக பணி வரன்முறைபடுத்த ஆணைகள் வழங்குவது – குறித்து.

பார்வை : 1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடித எண். 5629/PSD-D1/2017 நாள் 21.09.2017
2. முதன்மை செயலர் / தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களின் செயல்முறை எண். 1496/இபி2/2015 நாள். 04.10.2017.

------

<u>ஆணை :</u>

கீழ்க்கண்ட 3 (மூன்று) நபர்கள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர்கள் தற்காலிகமாக ரூ. 19500–62000 (Level 8 Index 1) என்ற ஊதிய விகிதத்தில் நேரடி நியமனம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை 1–ல் உள்ள தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தின் மூலம் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர்.

பார்வை 2–ல் உள்ள செயல்முறை ஆணையின்படி மேற்கூறிய நபர்களுக்கு இளநிலை உதவியாளர் பணி நியமன ஆணை வழங்கப்பட்டு அவரவருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தினத்தன்று இளநிலை உதவியாளராகப் பணியேற்றுள்ளனர். இவர்களின் தற்காலிக தேர்வு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் வரிசை எண்–3ல் குறிப்பிட்டுள்ளபடி உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிக்கான பொது விதிகள் விதி 23 (a) (i) ன் கீழ் பின்வரும் 3 (மூன்று) இளநிலை உதவியாளர்களின் தற்காலிக பணி அவரவர்களுக்கு எதிரே குறிப்பிட்ட நாள் முதல் முறையாக வரன்முறை செய்யப்படுகிறது.

Scanned with CamScanner

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|
| 1. | திரு. கு. சண்முகம்,<br>இளநிலை உதவியாளர் | 09.10.2017 |
| 2. | திருமதி. ரா. ரஞ்சனா,<br>இளநிலை உதவியாளர் | 09.10.2017 |
| 3. | திரு. பெ. பாலச்சந்திரன்,<br>இளநிலை உதவியாளர் | 11.10.2017 |

மேற்கூறிய 3 (மூன்று) இளநிலை உதவியாளர்கள் இரண்டு ஆண்டு கால (முறையான பணி) தகுதி காண் பருவம் மூன்றாண்டுகளுக்குள் நிறைவு செய்ய வேண்டும். இவர்கள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் குடிமை பயிற்சி நிலையம், பவானி சாகரால் நடத்தப்படும் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

" The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV Services 2015-2016 recruitment ".

16/5/19

இணை இயக்குநர்( பணியமைப்பு)

16/5/19

<u>பெறுநர்</u>

1. திரு. கு. சண்முகம், உதவியாளர்,
   மாவட்ட தொழில் மையம், வேலூர்.
2. திருமதி. ரா. ரஞ்சனா, இளநிலை உதவியாளர்,
   மத்திய அலுவலகம்.
3. திரு. பெ. பாலச்சந்திரன், இளநிலை உதவியாளர்,
   மத்திய அலுவலகம்.

நகல் : செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை—3.
நகல்: பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், வேலூர் தனியருடைய பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.
நகல் : முதுநிலை பட்டியலுக்காக துவங்கவிருக்கும் புதிய கோப்பு
நகல் : தகுதிகாண் பருவம் பதிவேடு
நகல் : இருப்புக்கோப்பு

Scanned with CamScanner